## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# ‘முரசொலி செல்வம்’ படத்திறப்பு - புகழஞ்சலி!

## திருவுருவப் படத்தினை கி.வீரமணி திறந்து வைக்கிறார்!

சென்னை, அக்.20-

‘முரசொலி’ எனும் கழகத்தின் போர்வாளும் கேடயமுமான இலட்சியப் பேரிகையின் முன்னாள் ஆசிரியர் - இந்தியத் திருநாட்டின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவர் - பல திரைப்படங்களின் தயாரிப்பாளர் - தலைசிறந்த திராவிட இயக்கச் சிந்தனையாளர் - தன்னிகரற்ற எழுத்தாளர் - ‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு’ எனும் பேரறிஞர் பெருந்தகையின் கூற்றுக்கொப்ப - எதிரிகளிடமும் நட்பு பாராட்டும் நல்லியல்பினர் - சிறந்த குணங்களின் கலவையாக, ஒருமுகமாகத் திகழ்ந்த தகைமையாளர் - சிரித்த முகத்துக்குச் சொந்தக்காரர் - முரசொலி செல்வம் அவர்கள்!



“வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக்குள் செல்வம் நின்றிருந்தால் என்னகம் வாடிப் போயிருக்கும். அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்துணைப் பொருத்தமாக அப்போதே வைத்தேன் என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன்.

எனது மகள் செல்வியுடனான திருமணத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை விட சட்டமன்றக் கூண்டுக்குள் செல்வம் சிரித்துக் கொண்டிருப்பதை பார்த்து பெரும் ஆனந்தம் அடைந்தேன்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட வரலாற்றுக்குரிய திராவிட இயக்கச் சிந்தனையாளர் முரசொலி செல்வம் அவர்கள் கடந்த 10-ஆம் தேதி அன்று இயற்கை எய்தினார்.

**தமிழ்நாட்டின் - திராவிட இயக்கத்தின் போர்வாள் - ‘முரசொலி’ சார்பில் முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பும் - புகழஞ்சலியும் நாளை (21.10.2024 - திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு - சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.**

**நிகழ்ச்சிக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை வகிக்கிறார்.**

**முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப்படத்தை திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் திறந்து வைக்கிறார்.**

### புகழுரையாற்றுவோர்!

**கழகப் பொதுச் செயலாளர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், ‘இந்து’ என். ராம், புரட்சித் தமிழன் சத்தியராஜ், பேராசிரியர் மு.நாகநாதன் ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.**

# “சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்”



ஒரு தனி மனிதன்
அளவுக்கு மீறிய
அதிகாரங்களைப்
பெற்றிருப்பது எப்படி
எதேச்சதிகாரத்துக்கு
வழிவகுக்குமோ;
அதேபோல் அரசியல்
சாசனத்தின் மூலமாக
ஒரே இடத்தில்
அதிகாரங்கள்
குவிக்கப்பட்டிருப்பதும்
எதேச்சதிகாரத்தில்
கொண்டுபோய்
விட்டுவிடும்.

**..ஜனநாயகக் காவலர்**
**கலைஞர்...**



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.10.2024) திருவண்ணாமலை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 860 ஊராட்சி மன்றங்களுக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 412 ஊராட்சி மன்றங்களுக்கும் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த 208 ஊராட்சி மன்றங்களுக்கும் 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், (திருவண்ணாமலை), நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.10.2024) திருவண்ணாமலை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 860 ஊராட்சிகள், கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 412 ஊராட்சிகள் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த 208 ஊராட்சிகளுக்கும், 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை கொண்டு செல்லும் வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.10.2024) திருவண்ணாமலை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 803 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.78.05 கோடிக்கான கடனுதவி காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், நேற்றையதினம் (19.10.2024) ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட் மற்றும் திருப்பத்தூர் பசுமை சாரம் நண்பர்கள் குழு சார்பில் குறுங்காடு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில், சிறுகூடல்பட்டி சமத்துவபுரம் பகுதியில் தொடங்கி வைத்தார். உடன், ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட் நிறுவன நிர்வாகிகள் மற்றும் திருப்பத்தூர் பசுமை சாரம் நண்பர்கள் குழுக்களை சார்ந்தவர்கள், அழகப்பா அரசு கலைக் கல்லூரி கிரீன் நீடா ஒருங்கிணைப்பாளர் உட்பட பலர் உள்ளனர்.

## 2023-2024 அரவைப் பருவத்திற்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு

# சிறப்பு ஊக்கத் தொகை வழங்கிட - ரூ.247 கோடி ஒதுக்கீடு!

## தமிழ்நாடு அரசு – ஆணை வெளியீடு!

**சென்னை, அக். 20-**

**2023-2024 அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்கு பதிவு செய்து கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதற்காக ரூ. 247.00 கோடி வழங்கிட அரசு ஆணை வெளியிட்டுள்ளது.**

**இது தொடர்பான - வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் அறிவிப்பு வருமாறு:-**

*கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரித்து நலிவடைந்த நிலையில் இருந்து மீட்டெடுக்க பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.*

*அதன் ஒரு பகுதியாக கரும்பு விவசாயி களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசு அறிவிக்கும் கரும்பு விலைக்கு மேல் ஊக்கத்தொகை அறிவித்து வருகிறது.*

*அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக கரும்பு சாகுபடி பரப்பு அதிகரிப்பதுடன் சர்க்கரை ஆலைகளின் செயல்திறனும் அதிகரித்து வருகிறது.*

**கரும்புக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.215**

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்,*

*2024-25 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 2023-24 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.215 சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்தார்.*

*ஒன்றிய அரசு 2023-24 ஆம் அரவைப்பருவத்திற்கு அறிவித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான (Fair and Remunerative Price) ரூ. 2919.75/-யைக் காட்டிலும் கூடுதலாக மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக டன்னுக்கு ரூ.215 வழங்கிடும் வகையில், ரூ.247.00 கோடி நிதியினை மாநில நிதியிலிருந்து அரசு வழங்கி ஆணையிட்டுள்ளது.*

**சிறப்பு ஊக்கத் தொகையுடன் சேர்த்து டன்னுக்கு ரூ.3134.75/-**

*அரசு வெளியிட்டுள்ள இந்த ஆணையின்படி, தமிழ் நாட்டில் இயங்கி வரும் இரண்டு பொதுத் துறை, 12 கூட்டுறவு மற்றும் 16 தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு 2023-24 அரவைப்பருவத்தில் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ.2919.75 மற்றும் மாநில அரசின் சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.215 யையும் சேர்த்து, டன் ஒன்றுக்கு ரூ.3134.75/- விவசாயிகள் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*2023-24 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளின் விபரம் சேகரிக்கப்பட்டு, சர்க்கரைத் துறை இயக்குநரகத்தால் கூர்ந்தாய்வு செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களின் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின்படி, தகுதியுள்ள விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*கரும்பு விவசாயிகளின் நலனுக்காக ரூ.247.00 கோடி மதிப்பில் மாநில அரசு வழங்கும் சிறப்பு ஊக்கத்தொகையினால் சுமார் 1.20 இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்.*

*இவ்வாறு வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் அறிவித்துள்ளார்.*

## தீபாவளியை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் – அனைத்து

# அரசு - கல்வி நிறுவனங்களுக்கு - நவ.1 அன்று விடுமுறை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, அக். 20-**

**தீபாவளியை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு 01.11.2024 அன்று விடுமுறை என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

**இது தொடர்பான அரசு செய்தி வெளியீடு வருமாறு:-**

*இவ்வாண்டு தீபாவளியை 31.10.2024 அன்று கொண்டாடும் பொருட்டு தமது சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 01.11.2024 அன்று ஒரு நாள் மட்டும், தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்தும் அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கவும், அவ்விடுமுறையை ஈடு செய்யும் வகையில் 09.11. 2024 அன்று பணி நாளாக அறிவித்தும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.*

*இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.*